# திருவிளையாடற் புராணத்தில் இசைக்கலை

**வே.அம்சவேணி**
முனைவர் பட்ட ஆய்வு மாணவி
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோவை.

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** II

**மாதம்:** ஜூலை

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

## முன்னுரை

பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்த தமிழகம் செஞ்சொற்களைக் கொண்ட கவிதைச் சோலையாகத் திகழ்ந்து வருகிறது. ஐந்நூ ற்றுக்கும் மேற்பட்ட புலவர்கள் ஆயிரக்கணக்கான பாடல்களை இயற்றி தமிழுக்கு வளம் சேர்ந்துள்ளனர். அவற்றையெல்லாம் பின்னாளில் வந்தவர்கள் ஒரு முறையாகத் தொகுத்து வைத்தனர். அத்தொகுப்பிற்கு எட்டுத்தொகை. பத்துப்பாட்டு என பெயரிட்டனர். அவற்றையே இன்ற சங்க இலக்கியம் என்கிறோம். இவை தோன்றிய காலத்தையே தமிழ் இலக்கிய வரலாற்றின் பொற்காலம் எனப் போற்றுகின்றோம்.

## தமிழ் மொழியின் வளம்:

சங்க காலம் பாண்டியர்களின் நெடிய வரலாற்றுடன் இணைந்ததாகும். தலைச்சிறந்த புலவர்களை அரசவைப் புலவராக அமர்த்தி மதிக்கப்பட்ட நிலை இருந்தது. அப்புலவர்கள் தமிழ் மொழியை ஆராய்ந்தனர். தமிழ் மொழிக்குச் சங்கம் வைத்து நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக தமிழை வளர்த்தனர். அத்தகைய தமிழ்க் குடியினர்.

**"கல்தோன்றி மண்தோன்றா காலத்தே**
**வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி"**

என்ற பெருமைக்கும் புகழுக்கும் ஏற்ப பண்டையத் தமிழ் மக்களின் தொன்மையும் வீரமும் போற்றப்படுகின்றது. பழங்கால மக்கள் வீரத்தை முதன்மையாகவும் உயிரைத் துச்சமாகவும் கருதினர். எதற்காகவும் அச்சம் என்பதே இல்லா நிலையைப் பெற்றவர்களாக சிறந்து விளங்கினார்கள்.

பழந்தமிழ் நாட்டு மக்கள் வேற்று நாட்டாருடன் நெருங்கிய தொடர்பு கொள்ளுவதற்கு முன்பாகவெ தமிழ் இலக்கியம் தோன்றி வளரத் தொடங்கியது. ஆதனால் பிறமொழி இலக்கியத்தின் சார்போ, கலப்போ இல்லாமல் தமிழ் இலக்கியம் வளர்ந்தது. ஆதலின் தமிழ் நாட்டின் இயற்கை வளம் பழந்தமிழரின் வாழ்க்கை நெறியுமே அந்தப் பழைய இலக்கியத்திற்கு அடிப்படையாக அமைந்தன. தமிழர்கள் இயற்கையோழயைந்த இன்ப வாழ்வு வாழ்ந்தனர். அத்தகைய கனவுகள் பழந்தமிழரின் கலைச்செல்வமான சங்க இலக்கியத்தை பதிவாகியிருப்பதை அறிய முடிகிறது.

**புற இலக்கியங்கள்**

"பாட்டும் தொகையும்" என்று போற்றப்படுவன சங்க கால இலக்கியங்கள். அவ்விலக்கியங்களில் அக நூல்களைவிட புற நூல்களே மிகுந்த சிறப்பினைப் பெற்றுள்ளன. புற நூல்களின் மூலமாகவே சங்க கால மக்களின் வாழ்க்கை நெறி முறைகளை மிக அழகாக அறிந்து கொள்ள முடிகிறது.

வளரும் தலைமுறையினருக்கும் வழிகாட்டியாகவும் எதிர்கால சந்ததியினரின் வரலாற்றுப் பெட்டகமாகவும் புற வாழ்வின் இலக்கணமாகவும் இந்நூல்கள் திகழ்கின்றன. நில வளத்தாலும் நீர் வளத்தாலும் கடல் வளத்தாலும் கலை வளத்தாலும் சிறந்து விளங்கிய பண்டைத் தமிழகம் கலை வளத்தாலும் உயர்ந்து விளங்கியது. சங்க காலத் தமிழ் மக்கள் உண்டதும் உடுத்ததும் கண்டதும் கேட்டதும் கொடுத்ததும் எல்லாம் கலைத் தன்மை வாய்ந்தனவாகவே விளங்கியமையைப் பண்டைய நூல்கள் உணர்த்துகின்றன.

இயற்கையாகவே அமைந்த அறிவு நுட்பமும் பரந்த நூலறிவும் சேர்ந்து அமைந்தவருக்கு எதிராக நிற்பது இந்த உலகில் எதுவும் இல்லை என்று தமிழ் மறையான திருக்குறளின் ஆசிரியர் திருவள்ளுவர் கூறியுள்ளார். மனிதனுக்கு இயற்கையிடமிருந்து கிடைத்த பொருள் பொதிந்த சுவைகளின் நுட்பமும் அறிவுக் களஞ்சியம் என்றழைக்கப்படுகின்ற நூல்களிடமிருந்து பெற்ற அறிவும் ஒருங்கே பெற்றவர்க்கு வாழ்வில் எந்த இடையூறும் இல்லாமல் செம்மையாகவே அனைத்துச் செயல்களும் அமையும்.

**கலை**

**"கலை என்றால் கல்வியல்ல, ஒருவற்குள்ள அறிவின் தனி ஆற்றலால் பிறக்கும் வியத்தகுமோர் பொதுச்செல்வம் இன்பப் பேறு"**

**(பாரதிதாசன் கவிதைகள் - 78: 6-8)**

என்ற பாடல் அடிகளின் மூலமாகவே கலை என்பது அறிவு மட்டுமல்லாது. ஒரு மனிதரின் தலை சிறந்த ஆற்றலால் பெறப்பட்ட செல்வம் என்றும் பெறுவதற்கு அறிய பேறு என்று சொல்லக்கூடிய அறிவையும் ஆற்றலை ஒருங்கே பெற்ற கலைச் செல்வத்தை இன்பப் பேறு என்று பாரதிதாசன் கூறுகின்றார். இதனை, க. வெள்ளைவாரணனார் **"உயர்திணை மாந்தரின் கல்வி பிறரால் கண்களாலும் செவிகளாலும் நுட்பாக உணரப்படும் சிறப்பே கலை"** என்கிறார்.

**(க. வெள்ளைவாரணர், அழகுக் கலைகள், ப.1)**

கலை என்பதை அழகின் ஒரு பகுதியாகக் கூறுவர். ஒருவர்க்கு ஒரு பொருளின் தோற்றம் அழகாகத் தோன்றும். அதுவே, மற்றவர்க்கு அழகற்றதாய்த் தோன்றம். எனவே கலை என்பது காணும் பொருளிடத்தும் காணும் மனதிடத்தும் ஒரு சேரத் தோன்றுவது என்கிறார்.

**(அ.ச. ஞானசம்பந்தன் (அ.ச.ஞானசம்பந்தன் - அழகுக்கலைகள் ப.30)**

இவ்வாறாக காணாமல் பொருளின் தோற்றத்தில் அழகைக் காண முயல்வது ஒரு முரசை மூடியுள்ள தோலைக் கிழித்து முரசொலி எங்கிருந்து வருகிறது எனப் பார்ப்பதையொக்கும் என்று ப. கோதண்டராமன் அழகின் கூறாகிய கலையை அறிவும் மனமும் ஒன்று சேர்வதாலேயே கலையை நன்கு அனுபவிக்க இயலும் என்கிறார். **(ப. கோதண்டராமன், அழகுக்கலைகள், ப.35)**

**சங்க காலத்தில் தமிழ்க்கலை:**

சிந்துவெளி நாகரீக காலத்தில் தோற்றம் பெற்ற திராவிடக் கலைகள் சங்க காலத்தில் தமிழ்க்கலையாக பருவம் பூத்துப் பொலிந்தது எனலாம். தமிழ், இசைக் குரலால், திசை அளந்தது. நடனம் ஆடுவததென்றே அமைந்த அளவு அழயால் முத்திரையால், மெய்ப்பாட்டால் அரிய கருவூலங்களைக் கொண்டதாக விளக்கியது. சிற்பக்கலையில் நயத்தோடு கூடிய வனப்பு மிக்க முக அழகினைக் காட்ழ சிந்தனை விருந்து படைத்தது. காலம் செல்லச்செல்ல நீண்ட நெடிய தெருக்களும் வானை நோக்கி அழகுற அமைக்கப்பட்டிருந்த பாவைகளும் தெய்வ வடிவங்களம் தலைமக்களின் வனப்போடு அமைந்திருந்த கோநகர் அமைப்புகளும் புதையுண்டும் கடல் கொண்டும் அழிந்தன.

**ஓவியக்கலை:**

சுவர் பழமைகளெல்லாம் காலச்சிறுவனின் வேகச் செலவில் கைப்பட்டு அளிந்தன. பருவுடல் காட்ட இசை எனும் நுண்கலையோ வெளியிடைக் கலந்து பரந்து நரம்பில் தவழ்ந்து குரதியில் உறைந்து நாவில் எழுந்து தலைமுறைதோறும் உயிர்த்து நின்றது. ஆயினும் அதனை அயற்பூச்சால் உவஅமைப்பை மாற்றியும் பெயரை மாற்றியும் தலைப்பட்ட பொல்லாப் பழியால் அதன் பண்டைத் தமிழ்க் கவின் இருக்கிறது. ஆடற்கலையும் அவ்வாறே தமிழர்க்குரியதேனும் அடிப்படை உண்மை புதிய பாரதம் எனும் பெயர் கொண்டு நிலையிலிருக்கிறது. இக்கலை மூலங்களெல்லாம் தமிழர்க்குரியன என்பதை மெய்ப்பிக்க சங்க இலக்கியத்தில் **“கலைக் கோட்பாடுகள்”** என்ற நூல் தோன்றியிருப்பதாகச் சான்றோர்கள் கூறியுள்ளனர்.

வானுயர நிமிர்ந்த தமிழக கோபுரங்களின் மீயுர் தோற்றப் பொலிவிலும் எஞ்சாத நின்றிருக்கும் ஆளுமையிலும் தொல்பொருள் ஆய்வுகளாலும் அகழாய்வுகளால் புலப்படும் பண்டை அரண்மனைகளின் நெடுஞ்சுவர் எச்சங்களிலும் பண்டைத் தமிழக கட்டுமானக் கலை திறனும் தேர்ச்சியும் பொறியியல் நுட்பமும் தெளிவுப்பட எடுத்துரைக்கக் காணலாம். இன்று காணப்பெறும் கோயிற் கட்டிக்கலையின் செம்மை திறமெல்லாம் பண்டைக்கால கட்டுமான கலையின் படிமுறை வளர்ச்சியேயாகும். ஆகையால் பண்டைக் காலத்தில் ஆயக்கலைகள் அறுபத்தினான்கினை வளர்ப்பதற்கு இடையறாது முயன்றுள்ளனர் என்பதை உணர முடிகிறது.

**இசைக்கலை**

அழகுக்கலைகளில் நான்காவது கலையாக் கூறப்படுவது இசைக்கலையாகும். இதனை இசைக்கலை என்றும் கூறுகின்றனர். இது காதினால் கேட்டு இன்புறத் தக்க இனிமையான இன்கலையாகும். புண்டைக் காலத்தில் தமிழர்களால் வளர்க்கப்பட்ட முத்தமிழான இயல், இசை, நாடகம் என்றதில் இதுவும் ஒன்றாகும். எனவே, தமிழர்களால் வளர்க்கப்பட்ட கலைகளில் இசைக் கலை மிகவும் பழமையானது.

ஆதியும் அந்தமும் இல்லாத இறைவன் இசை வடிவானவன். ஆவனால் படைக்கப்பட்ட உலகமும் மனதை மயக்கும் இசையால் சூழப்பட்டிருக்கிறது. இறைவனால் படைக்கப்பட்ட பஞ்ச பூதங்களும் அதாவது நில, நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்தும் ஒலி வடிவத்தில் தன்மையைப் பெற்று எப்போது இனிமையான இன்னிசையை பரப்பிக் கொண்டே இருக்கின்றன.

**இசை வகைகள்:**

அடிப்படை இசையொலிகள் என்பனவற்றை ஏழாகக் கூறியுள்ளனர். அவை, குரல், துத்தம், கைக்கிளை, உழை, கிளி, விளரி, தாரம் என்பன இவற்றைச் “சுரங்கள்” என்று அழைக்கின்றனர்.

**இசைக்கருவிகளின் வகைகள்:**

இசைக்கருவிகளை நான்காகப் பிரித்துக் கூறியுள்ளனர். அவை தோல் கருவிகள், துளைக் கருவிகள், சஞ்சக் கருவிகள் என்பனவாகும்.

1. தோலால் போர்த்தப்பட்டு வாரினாலும் கயிற்றினாலும் மிக இறுக்கமாக கட்டப்பட்டுள்ள அமைப்பபைக் கொண்டிருக்கும் இசைக்கருவிகள் தோல்கருவி எனப்படும். “உதாரணம், பேரிகை, மத்தளம், பறை.
2. மூங்கில் போன்ற பொருட்களில் துளையிட்டு அவற்றில் காற்றைச் செலுத்தி இனிமையான ஓசையைத் தருபவைகள் துளைக்கருவிகள். ஊதாரணம் புல்லாங்குழல், நாதஸ்வரம்.
3. நரம்புகளின் மூலமாக ஒலியை உண்டாக்குபவை நரம்புக்கருவிகள் உதாரணம் யாழ், வீணை தம்புரா.
4. ஒன்றோடு ஒன்ற தட்டுவதன் மூலமாக ஒலி உண்டாக்குபவை சஞ்சக் கருவிகள் உதாரணம் சேகண்டி, சப்ளாக்கட்டை முதலியனவாகும். **(வெற்றிச்செல்வன் இசையியல் ப.70)**

**ஆயற்கலைகள் அறுபத்தினான்கு:**

பண்டைக்கால மக்கள் தங்களது அன்றாட தேவைகளுக்காகவும் பொழுதுபோக்கிற்காகவும் பல்வேறு வகையான தொழில்களையும் கலை நிகழ்ச்சிகளையும் படைத்தனர். அவ்வகையில் படைக்கப்பட்ட ஒவ்வொன்றும் கலையின் வடிவமாக தெய்வீகத் தன்மை உடையதாக காணப்படுகின்றன. அறிஞர்கள் அவற்றையெல்லாம் தொகுத்து அறுபத்தினான்கு எனக் கணக்கிட்டு கூறியுள்ளனர். இதனையே "ஆயகலைகள் அறுபத்தினான்கு" என்றும் அழைப்பர்.

இவற்றிலுள்ள இசைக்கலை என்பது அனைத்திற்கும் முதன்மையான இறைவன் முதல் அ∴றிணை உயிர்கள் வரை அனைத்தும் இன்பம் பெறக் கூடிய இசைக்கலையைப் பரஞ்சோதி முனிவரால் இயற்றப்பட்ட திருவிளையாடற் புராணத்தில் இசைக்கலை பற்றிய செய்திகள் மிகச்செம்மையாகக் கூறப்பட்டிருக்கிறது.

**திருவிளையாடற் புராணத்தில் இசைக்கலை**

திருவிளையாடற் புராணத்தில் இந்திரன் பழி தீர்த்தப்படலத்தில் விண்ணுலகத்திற்குத் தலைவனாகிய இந்திரன் விண்ணுலகில் ஆடலோடு இனிய இசையுடன் கூடிய பாடலையும் கண்டும் கேட்டும் மிகவும் மகிழ்ந்திருந்தான் என்று கூறப்பட்டுள்ளது. எத்தகைய சிறப்புப் பெற்றவர்களானாலும் இசையைக் கேட்டு மயங்காதவர்கள் இல்லை என்பதனைப் புராணங்களின் மூலமாகவும் உணர்த்தப்பட்டிருக்கிறது. மேலும் ஆடலும் பாடலும் புரிகின்ற வனப்பு ஆகியவற்றை மிகுந்த உவமையுடன் விளக்கப்பட்டிருக்கிறது. இதனை,

**"மூவகை மலரும் பூத்து வண்டுகளே முழங்கத் தெய்வப்**
**பூவலர் கொழ பேர்ந் தன்ன பொன்னார் கூத்தும் அன்னார்**
**நூவலர் ரமுத மன்ன பாடலு நாக நாட்டுக்**
**குாவலன் கண்டு கேட்டுக் கழிமதுக் கடலு ளாழ்ந்தான்"**

(பரஞ்சோதி முனிவர், திருவிளையாடற் புராணம் மதுரைக்காண்டம். 345)

என்று இசையின் சிறப்பை விளக்கியுள்ளனர்.

**ஓசை நயம்**

மலயத்துவச பாண்டியனும் அவனது மனைவியாகிய காஞ்சமாலையும் மகப்பேறு வேண்டி வேள்வி செய்தனர். அந்த வேள்வியானது இந்திரனுக்கு உகந்த திசையாக திருக்கோயிலின் கீழ்த்திசையிலிருந்து தொடங்கப் பட்டிருக்கிறது. வேத நூல்களை நன்கு கற்றறிந்த மிக்க புலமை உடையவராகிய குறவர் கூறும் நன்நெறிகளின்பழ மந்திரங்களை மிகச்செறிவோடு உச்சரித்து ஓசை நயம்பட அழகுற எடுத்தல், தொடுத்தல், நலிதல் எனும் இசை பாடி வேள்வியானது வளர்க்கப்பட்டது என்பதனை,

**"ஆசறும றைப்புலவ ராசிரியர் காட்டும்**
**மாசறுச டங்கின்வழி மந்திரம் உதாத்தம்**
**ஓசை அனு தாத்தசொரி தம்தழுவ வோதி**
**வூசவ னிருக்கையி லிருந்தெரி வளர்ப்பான்"**

**(திருவிளையாடற் புராணம் மதுரைக்காண்டம், 525)**

என்று இசையை இசைப்பதற்கும் முறைகளை வகுத்தனர் நம் முன்னோர். அதன்படியே இறைவனுக்கு நடைபெறும் வேள்விகள் அனைத்தும் நடைபெற்றதனை உணரலாம்.

**இசைக்கருவிகளின் முழக்கம்**

உலக உயிர்கள் அனைத்தும் இருளிலிருந்து ஒளி பெறவும் துன்பத்திலிருந்து மகிழ்ச்சியைப் பெறுவதற்கும் அவதரித்தவர் தடாதகைப் பிராட்டியர். ஆவர் மணமிக்க மலர்மாலைகளை அணிந்துள்ள உள்ளக்குறிப்பை உணர்ந்து கொண்ட மந்திரிகளும் மற்றவர்களும் எட்டு திசைகளும் முழங்குமாறு இசைக்கருவிகளை ஒலிக்கச்செய்து மன மகிழ்வை வெளிப்படுத்தினர். இதனை,

**ஆர்த்தன தடாரி பேரி ஆர்த்தன முருடு மொந்தை**
**ஆர்த்தன வுடுக்கை தக்கை ஆர்த்தன படகம் பம்பை**
**ஆர்த்தன முழவம் தட்டை ஆர்த்தன சின்னம் தாரை**
**ஆர்த்தன காளம் தாளம் ஆர்த்தன திசைக ளெங்கும்"**

**(திருவிளையாடற் புராணம் மதுரைக்காண்டம், 605)**

என்று பல்வேறு வகையான இசைக்கருவிகளை முழங்கச்செய்து மன மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

அக்கருவிகளாவன தடாரிகள், பேரிகைகள், முருடுகள், மொந்தைகள், உடுக்கைகள், தக்கைகள், படகம், பம்பை, முழவம், தட்டை, சின்னங்கள், தாரை, காளம், தாளம் என பல்வேறு வகையான இசைக்கருவிகளை கொண்டு இன்னிசையை எழுப்பி எட்டுத்திக்கிலும் மகிழ்ச்சியை பரப்பியுள்ளனர் என்பதனை அறிய முடிகிறது.

அன்றைய நாளில் கூறப்பட்ட இசைக்கருவிகளின் பெயர்களை தடாரி உடுக்கை, பறை, பம்பை, வாத்தியம்.

**பேரிகை-முரசு**
**முருடுகள்-பறை வகையான இசைக்கருவி**
**மொந்தை-மண்ணாலான சிறு குவளை மூலமாக வெளிப்படும் இசை**
**உடுக்கை-நடுவில் சுருங்கிய ஒலிக்கும் கருவி.**
**தக்கை-ஒரு வகையான பறை**
**படகம்-சிறுபறை, போர்ப்பறை**
**பம்பை-ஒருவகை மேளம் இது நெய்தல் நிலப்பறை**
**முழவம்-மத்தளம்**
**தட்டை-கிளி ஓட்டும் கருவி**
**சின்னங்கள்-அடையாளம்**
**தாரை-நீண்ட ஊது குழல்**
**காளம்- பாடலின் காலத்தை அறுதியிட்டு அளக்கும் கருவி (தமிழ்மாமணி-கலைமாமணி பாரதிதாசன் விருதாளர் புலவரேரு அரிமதிதென்னகன்- தமிழ் அகராதி)**

என்று அன்றைய நாளில் கூறப்பட்டுள்ள இசைக்கருவிகளின் பெயர்களை "தமிழ்மாமணி-கலைமாமணி-பாரதிதாசன் விருதாளர் புலவரேரு அரிமதி தென்னவன் அவர்களின் தமிழ் அகராதியின் மூலமாக பயன்படுத்தப்பட்ட இசைக்கருவிகளின் தமிழ்பபெயர்களை அறிந்து கொள்ள முடிகிறது.

முன மகிழ்வை மேலும் உற்சாகப்படுத்த இசைக்கருவிகளைக் கொண்டு இன்ப ஒலியை உருவாக்கி மகிழ்ச்சியடைந்துள்ளனர். என்றும் இசையோடு ஒன்றியே வாழ்ந்திருக்கின்றார்கள் அன்றைய கால மக்கள் என்பதனையும் உணர்த்தியுள்ளனர்.

**இசைப்பாடல்கள்:**

உலக உயிர்கள் அனைத்தையும் காத்து அருள் புரிகின்ற உமையம்மையாகிய தடாகைப் பிராட்டியார் வள்ளைத்தண்டு போன்ற நீண்ட காதினையுடைய அழகிய காதினை உடையவர் இவர். ஆழகிய மணிகளால் அலங்கரிக்கப்பட்ட வலிமை பொருந்திய தேரானது சென்றது.

அத்தகைய தேர் செல்லுகின்ற போது தேனொடு கூடிய மலர்ந்த மாலையணிந்த மகளிர் மகிழ்வோடு விளையாடுகின்ற நிகழ்வும் நடைபெற்றுக் கொண்ழருக்கிறது. அதனுடனேயே வேதங்களைக் கற்று உணர்ந்தவர்கள் மனதால் நற்சிந்தனையோடு வாயால் கூறும் வாழ்த்து மொழிகள் ஒரு புறம் மிகுந்த இசையோடு மிகுதியாக இசைக்கப்படுகிறது. அதனுடனே ஆடலும் பாடலும் ஒருங்கே கூடிய அமுதம் போன்ற தெளிந்த ஓசையுடைய இசைப்பாட்டுகள் சேர்ந்தும் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. என்பதனை,

**“கள்ளவழி கோதை மாதா் எடுத்தெறி கவரிக்காடு**
**துள்ளாந் தணா்வா யாசி யொருபுறந் துவன்றி யாா்ப்த்**
**தெள்விளி யமுத கீத மொருபுறந் திரண்டு விம்ம**
**வள்ளைவாா் குழைஎம் அன்னை மணித் திண்டோ் நடந்தே தன்றே”**

**(திருவிளையாடற் புராணம் மதுரைக்காண்டம், 615)**

என்று இசையுடன் கூடிய பாடல்கள் பாடப்பட்டதை அழகுப்பட கூறப்பட்டுள்ளது.

**துயர நிலையில் இன்னிசை**

கற்பு நெறியினையுடைய அரக்கியா் கல மகளிரின் கணவா் போாிலே இறந்து விடுகின்றனா். கணவரது இறப்பை தாங்க இயலாத அரக்கியா் மிகுந்த துயரத்திற்கு உள்ளாகின்றனா். இந்நிலையில் இறந்த கணவரது உயிரானது சொா்க்கத்தை அடைவதற்குள்ளாகவே இவா்கள் தமது கணவருடன் வாழ்ந்த காலத்தில் நடைபெற்ற நிகழ்வுகளையெல்லாம் நினைத்து புலம்பி இன்னிசையுடன் கூடிப் பாடுகின்றனா். அதனுடனேயே அவா்களது துயர நிலையையும் வெளிப்படுத்துவதுமே அரக்கியா் குல மகளிரின் இயல்பாகும் என்று பரஞ்சோதி முனிவா் கூறியுள்ளாா். இதனை,

**“இடையினோ னேனைப் பிங்கலை யியக்கம் இகந்து**
**நடுவுறு தொழிலாற் பிரமாந் திராந்த நடைபெற வசைக்கு முள்ளாளம்**
**கொடிரது துடியாள்பாடலு மதுகேட்ட னைவருங் குதுகல மடைந்தாா்”**

என்று விளக்கப்பட்டது.

**பாடல் பாடும் முறை**

இசையொடு கூடிய பாடலைப் பாடுகின்ற போது இடைகலை, பிங்கலை என்றழைக்கப்படுகின்ற முதன்மையான இயக்கத்தினைத் தடுத்து மூலதாரத்தினின்றும் காற்றினை எழுப்பி மிடறு வீங்காமல், கண் மூடாமலும் பற்கள் வெளிப்படாமலும் புருவங்கள் மேல் ஏறாமலும் கபாலம் துடியாமலும் பாடல் பாடப்பட்டிருக்கிறது. அப்பாடலைக் கேட்டு அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியடைந்துள்ளனா் எனலாம்.

**தொகுப்புரை**

திருவிளையாடற் புராணத்தில் இசைக்கலையானது பல்வேறு வகையான சூழ்நிலைகளில் இசைப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தூளம் என்றழைக்கக் கூடிய இசைக் கலையை வெளிப்படுத்த பல்வேறு வகையான இசைக்கருவிகளைக் கொண்டு மிகச் செம்மையான முறையில் இசையை வெளிப்படுத்தியுள்ளனா்

**பாா்வை நூல்கள்**

1. தமிழா் வளா்த்த அழகுக்கலைகள் - மயிலை சீனி வேங்கடசாமி
2. பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணம் - வேங்கடசாமி நாட்டாா் உரை.
3. உலகை வளா்த்த ஆய கலைகள் அறுபத்தினான்கு - கிருஷ்ணமாச்சாாியாா். சி. நா
4. இலக்குடியின் தமிழ்மாமணி - கலைமாமணி - பாரதிதாசன் விருதாளா்புலவரேரு அாிமதி தென்னகன்